**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No.104 /2020 PW .7**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தீபா | தந்தை/கணவர் பெயர்: | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : மருத்துவர் |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.02.2026

---

**(1 முதல் 4 எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் சார்பில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**11.02.2026 முதல் விசாரணை:**

**1.** நான் தற்போது தஞ்சாவூரில் அரசு மருத்துவ கல்லூாரி மருத்துமனையில் பொது அறுவை சிகிச்சை துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன் . நான் 09.06.2020 ல் புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த போது , 42 வயது மதிக்கதக்க பெரியண்ணன். த/பெ சின்னகருப்பன், கூட்டுக்காடு உலகம்பட்டி அஞ்சல் என்பவரை வலயப்பட்டி மருத்துவமனையில் இருந்து மேல் சிசிக்சைக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்.

2. அவரை அவசர சிகிச்சை மருத்துவர் உள்நோயாளியாக 09.06.2020 ல் மதியம் 02.10 மணியளவில் அனுமதித்தார். அவரை அனுமதித்த போது முழு சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு தலைக்கு CT ஸ்கேன் எடுக்கப்பட்டு சிகிக்சை அளிக்கப்பட்டது . அவருடைய CT ஸ்கேன் அறிக்கை இயல்பாக இருந்ததாக தெரிய வந்தது . அதனால் அவரை 12.06.2020 அன்று அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து சாதாரண காயம் என்று விபத்து பதிவேட்டில் நகலில் கருத்துரை தெரிவித்தேன் . அந்த விபத்து பதிவேட்டு நகலின் 3 ம் நிலை நகலினை ஆஜர் செய்கிறேன் . மேற்படி ஆஜர் செய்யப்பட்ட நகலை ஒப்பீடு செய்யப்பட்டு வழக்கு கோப்பில் உள்ள **(விபத்து பதிவேட்டு நகல் அ.த.சா.ஆ–3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

வலயப்பட்டி அரசு மருத்துவமனையில் மேற்சொன்ன நோயாளி 07.06.2020ம் தேதி காலை 10.10 மணிக்கு உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து 09.06.2020ம் தேதி புதுக்கோட்டைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

3.காயம்பட்ட நபர் தனக்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது என்று என்னிடம் சொல்லவில்லை. தலையில் வெளிகாயம் இல்லை என்றால் சரிதான் . தலைவலி, மயக்கம், பாசாங்காக இருக்கலாம் என்றால் சரிதான்.